சக்ரவர்த்தினி.

"கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாரா நெறி".

Vol ~~VIII.~~ IX | *August* 1913. | No 1
தொகுதி ~~௮~~ ௯ | ஆகஸ்டு 1913. | பகுதி க

பரோபகாரம்.

நம்மனோருட் பெரும்பான்மையோர் பிறர் நமக்கு விபத்து வந்தபோ துதவிசெய்ய வேண்டுமென்று விரும்புகின்றனரே யன்றித் தாம் பிறர்க்கு விபத்துவந்தபோ துதவிசெய்யவேண்டுமென்று கருதுகின்றாரில்லை யென்பது நமக்குத் தெரிந்த ஒவ்வொருவரையும் நாம் நன்கு கவனித்து வருவோமாயின், விளங்குவதாம். பிறர், நமக்கு விபத்துவந்தபோது உதவிசெய்ய வேண்டுமென்று நாம் விரும்புவதுபோல அவரும் விரும்புவாரன்றோ என்பது பற்றி நம்மனோர் ஆராய்ந்து நோக்குவதருமையினு மருமையாமென்பது நம்முடைய அனுபவத்தால் செவ்வனே விளங்குவதாம். பிறர்க்கு உதவிசெய்வது நம்முடைய கடமைகளி லொன்றாம்; அவருடைய வுதவியை எஞ்ஞான்றும் நாம் எதிர் பார்ப்பது கூடாதென் றெண்ணி, பிறர்க்குத் தமக் கியன்றவரை யுதவி செய்கின்றவர்தாம் பரோபகாரிகளென்று கூறுவதற் குரியவராவர். பிறர் நமக்கு விபத்து நேர்ந்தபோது உதவிசெய்ய வேண்டுமென்று கருதி, அவர்க் குதவிசெய்வது ஒருவாற்றானும் பரோபகார மாவதன்றாம். பிறர் நமக் குதவிசெய்ய வேண்டுமென்று கருதி, அவர்க்குதவி செய்வது கடன்கொடுப்பது போலவாம். அதுபற்றி அவர் நமக்கு உதவிசெய்வது வாங்கிய கடனைக் கொடுப்பது போலவாம். பயனோக்கிப் பிறர்க் குதவிசெய்வதும், அவர் அதுகாரணமாக வுதவிசெய்தவர்க் குதவிசெய்

வதும் கடன் வாங்குவதும் அதனைக்கொடுப்பதும் போன்றிருத்தலின், பயனோக்கிச்செய்யு முதவி யெவ்வாற்றால் பரோபகாரமாம்? தாய், தந்தை, தமையன் முதலியவரை உண்டி, உறையுள், உடைமுதலியன தந்துபசரிப்பது செய்ந்நன்றி மறவாது செய்யு முபகாரமாகுமேயன்றிப் பரோபகாரமாவதன்றாம்.

"என்று முகம னியம்பா தவர்கண்ணும், சென்று பொருள்கொடுப்பர் தீதற்றோர்", "கைம்மா றுகவாது கற்றறிந்தோர் மெய்வருந்தித், தம்மா லியலுதவி தாஞ் செய்வர்" என்று நன்னெறி கூறுவதை நன்குணர்ந்து நோக்குவார்க்குப் பரோபகாரமென்பது இத்தன்மையதாமென்று செவ்வனே புலனும். பிரதியுபகாரத்தை யெதிர்பாராது பிறர்க்குக் கூடுமானவளவும் உபகாரஞ் செய்வதே பரோபகாரமாம். இவர் நட்பினர், இவர் பகைவர், இவர் அயலார் என்று கருதிப் பகைவர்க்கும் அயலார்க்கும் உதவி செய்யாது நட்பினர்க்கு மாத்திரமுதவி செய்வது பரோபகாரமாகாதென்றுணர்ந்து, பகைவர் முதலிய யாவருக்கும் அவர் சன்மார்க்கத்திலொழுகுமாறு உபகாரஞ்செய்வது பரோபகாரமாமென்றறிந்து பகைவர், அயலார், நட்பினரென்னு முத்திறத்தார்க்கும் உதவி செய்தவர்தாம் பரோபகாரியென்னும் பெயர்படைத்து விளங்கினர்.

புண்ணியம் பெருகப் பாவமொழியப் புவியிலவதரித்த சீராமர் தமது கற்பின் கிழத்தியாகியசீதையைக்காவாகக்கவர்ந்து சென்ற இராவணன் முதலாவதாக இலங்கையிற் போர்க்குவந்தபோது, அவனை மணிமுடி சிதறச் செய்து தனிமையாக்கி "ஆள யாவுனக் கமைந்தன மாருத மறைந்த, பூளை யாயின கண்டனை யின்றுபோய்ப் போரற்கு, நாளைவா" என்று கூறி யனுப்பியது பகைவர்க்குச் செய்த பரோபகாரமாம். இராவணன் வாயிலாகத் தாம் பெறுவதற்குரிய வுதவியொன்று மில்லா திருந்தும் அவனது நிலையை நோக்கி இராமபிரான் அவனைக் கொல்லாமலனுப்பியது பரோபகாரமாவதன்றி, மற்றையாதாம்? கூடுமான வளவும் பகைவர்க்கும் உபகாரம் செய்யவேண்டும் என்பது சீராமபிரானுடைய இச்செய்கையால் நன்கு விளங்குமன்றோ? பகைவர்க்கும் பயனோக்காம லுபகாரஞ்செய்வது தமது கடமையாமென் றொழுகுகின்றவர்தாம் பரோபகாரிகளுள் சிறப்புடையவராக விளங்குவர்.

துரியோதனன் வஞ்சகச்செயல் காரணமாகக் கட்டிய அரக்குமாளிகையினின்றுந் தப்பிப் பிராமணவேடம்பூண்டு ஏகசக்ரபுரமென்னு மூரில் வசித்து வந்த பாண்டவர்களுள் ஒருவனுன பீமனைக் குந்திதேவி ஒரு பிராமணப் பிள்ளையின் பொருட்டுப் பகாசூரனுக்கு இரையாகக்கொடுக்க வுடன்பட்டது அயலார்க்குச் செய்த பரோபகாரமாம். குந்திதேவி அப்பிள்ளையின் தாய்தந்தையருடைய பிரதியுபகாரத்தை யெதிர்பாராது, பீமனைப் பகாசூரனுக்கு இரையாகத்தர வுடன்பட்டு, அவனை யனுப்பியது பெரிதும் வியக்கத்தக்க விஷயமாம்.

நற்றவமுடைய குசேலர்க்குக் கிருஷ்ணமூர்த்தி பெருஞ்செல்வமுண்டாகக் கருணை செய்தமை நட்பினர்க்குச் செய்த பரோபகாரமாம். எல்லாமுடைய கிருஷ்ண மூர்த்திக்குக் குசேலர் வாயிலாகப் பெறத்தக்க தொன்று மின்றன்றோ?

இவ்வாறு பிரதியுபகாரத்தை யெதிர்பாராது, பகைவர் அயலார் நட்டாரென்னு முத்திறத்தாரிடத்தும் தக்கவாறு பரோபகாரம் செய்யும் பழக்கத்தை மிகுதியாக வுடையவர் "இமையளவுமுபகார மல்லால் வேறொன் றியக்காநிர்க் குணக்கடலா யிருந்தவொன்றே" என்று பெரியார் பணித்தவாறு, நம்மனோர்க்கு உபகாரமன்றிப் பிறிதொன்றைச் செய்யாத பரமேசுவரன் கருணைக்குப் பாத்திரராவரென்பதற் கொருசிறிதும் ஐயப்பாடில்லையாம். உலகத்தை ஆக்கியளித்தழிக்கும் பரமனுக்கு நம்மனோர் வாயிலாகப் பெறத்தக்க வுதவி யாதொன்று மின்றே! அங்ஙன மிருந்தும், அவன் நம்மீது கருணை கொண்டு உடம்பு முதலியவற்றை நமக்குத் தந்து, ராமகிருஷ்ணாதி யவதாரமாகவும், குரு மூர்த்தமாகவும் வந்து, நம்மனோர்க்குக் காலதேச நிமித்தங்கட் கேற்றவாறாக அநுக்கிரகஞ் செய்வதைக் கவனித்துப் பார்ப்போமாயின், பரோபகாரிகளாக விருப்பவர்களே பரமேசனது கருணைக்குப் பாத்திரராவாரென் றினிது விளங்குவதாம். பரோபகாரிக ளிடத்துத்தான் தொடர்புபற்றாது இயல்பாக எல்லாவுயிர்கள் மேலுஞ் செல்வதாகியகருணை நிலை பெற்றிருக்கும். மறைவாயுள்ள தீயையறிதற்குச் சிறந்தகுறி, அத்தீயினின் றெழும்புகையா யிருப்பதுபோல இவர் பரோபகாரியென் றுணர்தற்குச் சிறந்தகுறி, அவரிடத்து நிகழும் கருணையாம். புகையுள்ள விடத்துத் தவறாது தீயிருப்பது போலக் கருணையுள்ள விடத்துத் தவறாது பரோபகார மிருக்கு

மென்பது ஒருதலையாகலின், கருணையுடையவரே பரோபகாரியா வரென்றுணர்ந்து, கருணையை மேற்கொண் டொழுகுகின்றவர் பரோபகாரிகளாவதற்குத் தடையென்ப தொருசிறிதுமில்லையாம். மேகம் பிரதியுபகாரத்தை நம்மனோரிடத்தெதிர்பாராது மழைபெய் வதுபோல நாமும் பிரமசாரி, வானப்பிரஸ்தன், சந்நியாசி, ஆதர வற்றவர், தரித்திரர், எடுப்பாரின்றி பிறந்தவர், பிதிரர், தெய்வம், விருந்தினர், சுற்றத்தாரென்னும் பதின்மருக்கும் கூடுமானவளவும் உபகாரஞ் செய்யவேண்டும். பிரமசாரி முதலாயினோர்க்குப் பய னேக்காதுகூடுமானவளவும்வஞ்சகமின்றியுபகாரம்செய்வது தான் இல்லறத்தார்க்குச் சிறந்த பரோபகாரமாம். அறம் பொரு ளின்பம் வீடென்னும் புருஷார்த்தங்களை யுள்ளவாறு உலகத்தார்க்குணர்த் துதல் துறவறத்தார்க்குச் சிறந்த பரோபகாரமாம்.

சூரியன் சந்திரன்முதலிய ஒளிப்பொருள்கள் தவறாது உதய மாய் அஸ்தமித்து வருவதொழியின், நாம்பிழைப்பது கூடுமா? அவற்றால் நாமடையும் பயனுக்களவுண்டோ? இன்றன்றே? அவற் றிற்குநாம், யாதுஉபகாரம் செய்கின்றோம்? ஒன்றுமின்றே! நம் முடைய உபகாரத்தை யெதிர்பாராது சூரியன்சந்திரன் முதலிய ஒளிப் பொருள்கள் உதயமாயத்தமித்து வருவதையும், மேகம் மழை பெய்வதையும், காற்றுவீசுவதையும் நோக்குமேவா மாயின், நாம் பரோபகாரத்தினாலேயே பிழைத்துவருகின்றோ மென்பது விளங்குமன்றே? அவைசெய்யும் உபகாரத்தைப் பெற்று வரும் நாம் பிறர்க்கு உபகாரஞ்செய்யாதிருப்பது தகுதியுடையதாமோ? நமக்குமனித சரீரம்கிடைத்தது பரோபகாரஞ் செய்தற்பொருட் டென்றுநம்மனோருட் பெரும் பான்மைமேயாருணர்ந்தொழுகு கின் றாரில்லை. நம்மனோருள் ஒவ்வொருவரும் பரோபகாரஞ் செய்ய வேண்டு மென்னு மெண்ண முடையவராய்ப் பரோபகாரஞ் செ ய்து வருவாராயின், ஆதரவற்றவர், தரித்திரர் முதலாயினோ ரைக் காண்பதேயில்லையாம். நம்மனோருள் பெரும்பான்மையோ ரிடத்துப் பரோபகாரஞ்செய்ய வேண்டுமென்னு மெண்ணமுண் டாகா திருப்பதனாற்றான், ஆதரவற்றவர் தரித்திரர் முதலாயினோர் பெருகி வருகின்றனர்.

உடம்பைத் துரும்பென மதித்துப் பயன்கருதாது பிறர்க்கு உபகாரஞ்செய்ய முயலுகின்றவர் தாம் உத்தமபரோப காரியாவர்.

நீதியுட னரசாட்சி நெடுங்காலஞ்செய்து, உலகபோகத்துள் உவர்ப்படைந்து காட்டிற்குச்சென்று கடுந்தவம் புரிந்துவந்த சிபி

ச் சக்ரவர்த்தியின் பரோபகாரகுணத்தைச் சோதிக்க, இந்திரன் வேடுவனாகவும், அக்கினிபுறாவாகவும் வந்தனர். புறாவாகவந்த அக்னி "சிபியே! என்னை வேடுவன் துரத்திவருகின்றான்; என்னைப் பாதுகாப்பது உன் கடமையென்று கூறி, அவனிடத் தடைக்கலம் புகுந்தான். அடைக்கலம்புகுந்த அப்புறாவின் பொருட்டு, சிபி, தன் தொடையை வாளினா லறுத்துத் தராசில்வைத்து, புறாவின் எடைக்குச் சரியாக நிறுத்தபோது எடை ஒப்பாகாமையைக் கண்டு தராசிலே தானாகி ஏறிநின்றனன் என்ற சரித்திரத்தை நோக்குவோமாயின். தம்முடம்பைத் துரும்பென மதித்தொழுகுந் தூயவர் பரோபகாரத்தைக் கடைபோகச் செய்யுந் திறமையோ ரென்பது விளங்குமன்றோ? இறந்தால் உடன்வருவதொன்று மின்றென் றுண்மையுணர்ந்து, தேகத்தைத் துரும்பென மதித்துப் பரோபகாரஞ்செய்து வருவோமாயின், புண்ணியம் புகழ் மேன்மை முதலியவற்றை நாந்தவறாதடைவதுடன் கால விசேஷத்தின் கண்ணின் பெற்ற ஞானிகளுமாவோம்.

பரோபகாரம் பலரிடத்திலாது சிலரிடத்திருப்பதற்குக் காரணம் பலர் தவஞ்செய்வாராகாது சிலர் தவஞ்செய்வாராக இருப்பதேயாம். மனத்தையும் மெய் வாய் கண் மூக்குச் செவி யென்னு மிந்திரியங்களையும் ஒருமுகப் படுத்துவதாகிய தவம் நம்மிடத்தில்லா திருப்பதாற்றான் நாம் பரோபகார குணமுடையவராக இருக்கின்றிலம். "அந்தவ வல்லிருத்திச் சமூகினன் பரோபகாரன்" என்று போபாத சந்திரோதயம் கூறியவாறு தவத்தைச் செய்து சினமுதலியவற்றை யொழித்து, ஈசுவராசித்தனை செய்தல் முதலிய உத்தம குணங்களைப் பெறுவோமாயின், நாம் தவறாது பரோபகாரஞ் செய்தற்குரியவராவோம்; பரோபகாரஞ் செய்துவருவோமாயின். இம்மையில் புண்ணியம் புகழ் மேன்மை முதலியவற்றையடைந்து மறுமையின் சுவர்க்க இன்பத்தையும், முடிவில் மோக்ஷவீடாம் முத்தியையும் பெறுவோம்.

நம்மிடத்துள்ள பொருள் பிறர்க்கு ஒருவாற்றானும் போகக்கூடாது; பிறரிடத்துள்ள பொருளெல்லாம் நம்மிடத்தேவந்துசேரவேண்டுமென்னு மெண்ணம் நம்மிடத்தில் நாமறியாமலே குடிகொண்டிருக்கின்றது. அதனாற்றாம் செய்யும் வஞ்சகத்தொழில்களுக் களவேயில்லையாம்; அத்தொழிலால் காயமடையுந் தன்மைகளுக் கணக்கேயில்லையாம். பிறரைவஞ்சிக்கும் குணமே பரோபகாரத்திற்கு பகைவியாம்.

ரஞ்செய்யாமைக்குக் காரணமாம். பிறரைவஞ்சிக்குங்குணம் உடம்பின்நிலை உயிரினிலை முதலியவற்றை உள்ளவாறு தெளிந்து பரோபகாரஞ்செய்வதாலொழிவதாம். தவத்தைச்செய்து நல்லெண்ணங்களைப் பெற்றுப் பரோபகார குணத்தை மேற்கொண்டவர்தாம் கருணையென்னும் வாளால் பரத்துரோகமென்னும் பகைவனைவென்று வாழ்தற்குரியவராவர்.

பரோபகாரத்தை யில்லறத்தார் "வருவாயுட் கால்வழங்கி வாழ்தல்" என்று திரிகடுகம் கூறியவாறு தமக்குவரும்பொருளில் கால்பங்குக்கொண்டு செய்தல்வேண்டும். இதனால் நிலையுள்ள பரோபகாரத்தைச் செய்தல் நன்றென் றெவற்றுள்ளும் மிகநன்றுனதாம். நிலையுள்ளபரோபகாரம் நீர்நிலையேற்படுத்துதல், கல்விச்சாலையேற்படுத்துதல், சாலையமைத்தல், சத்திரங்கட்டுதல், ஆலயத்தைப் புதுக்குதல், ஆலயங் கட்டுதல் முதலியனவாம்.

நிலையில்லாப் பரோபகாரம் பசிமேபாடிருக்குமேழை கட்கு அன்னமிடுவது, பசுமுதலிய பிராணிகட்கு நேர்ந்த துன்பத்தை நீக்குதல், அந்தணர் சான்றோர் அருந்தவத்தோர்க்கு நேர்ந்த ஆபத்தையொழித்தல், ஆறுமுதலியவற்றில் விழுந்தவதிப்படும்பிராணிகளைக் கூடுமானபரியந்தம் காப்பாற்றுதல் முதலியனவாம். இவ்விருவகைப் பரோபகாரமும் இன்றியமையாது வேண்டப்படுவனவாயிருத்தலின், இவற்றைச்செய்து, பவத்தை யொழிக்க முயல்வதே பண்புடையார் கடனாம்.

நீரற நன்று நிழனன்று தன்னில்லுள்
பாரற நன்றுபாத் துண்பானேல்—பேரறம்
நன்று தளிசாலை நாட்டல் பெரும்போகம்
ஒன்றுமாஞ் சால வுடன்"

"குளந்தொட்டுக் கோடு பதித்து வழிசீத்
துளந்தொட் டுழுவய லாக்கி—வளந்தொட்டுப்
பாகு படுகிணற்றோ டென்றிவை பாற்படுத்தான்
ஏகுஞ் சுவர்க்க மினிது".

என்று சிறுபஞ்சமூலங்கூறுவதிங்கு நன்குணர்தற்பாலதாம்.

பூங்காவனம்.

மூன்றாடர்ச்சி.

நான்காம் அதிகாரம்.

சென்ற அதிகாரத்தில் கூறிய சம்பவம் நிகழ்ந்து ஒன்றரை வருடமாய்விட்டது; இக்கால வெல்லைக்குள் ஒரு விசேஷமும் நிகழவில்லை. அதன்பின் சிங்கைபுர ஜமீன்தாருக்கும் அருளானந்தமுதலியாருக்கும் பல கடிதங்களினால் சம்பாஷணை நடந்து ஈற்றில் ஜமீன்தார் பூங்காவனத்தை விவாகஞ் செய்தற்காகச் சுப முகூர்த்தம் நியமிக்கப்பட்டது. இது இவளுடைய அனுமதியுடனே நிச்சயிக்கப்பட்டது. ஆனால் விவாகம் இயன்ற வரையில் இரகசியமாக நடத்தல்வேண்டுமெனக் கதாநாயகி விரும்பினாள். அவளுடையவிருப்பப்படியே ஆடம்பரமின்றிக் குறிக்கப்பட்ட சுப முகூர்த்தத்தில் மன்றல் முடிந்து விட்டது. ஒருகால் வாசர்கள் நினைக்கலாம் இவள் தனது மனம் வாக்குக்காய மென்னும் திரிகரண சுத்தியுடன் விரும்பி நேசித்தகாதலனாகிய அருட்பிரகாசத்தை மறந்துபிறிதொருநாயகனைமணந்ததுஎப்படியென; ஆனால் இது இவளால்விரும்பப்பட்டநாயகன் இறந்துபோயினனென அறிந்தமையாலும், தந்தையார்மீது கொண்ட அன்பின் பெருக்கினால் அவர்கட்டளையை மறுக்கமுடியாமையினாலுமாம். விவாகம்முடிந்த இரண்டுமூன்று தினத்தின்பின் பூங்காவனம் தன்னுடைய நாயகனுடன் தனிமையான ஓர் இடத்தில்வசிக்கவேண்டியவளானாள். கன்னிகையாக விருந்து இப்பொழுது இல்லற தருமத்தை நடத்துதற்கு உரிமையுடையவளானபூங்காவனம் தனது நாயகராகிய ஜமீன்தாருடன் புறப்படும் தினத்தன்று காலையில் மாமியாரிடமும் பிதாவிடமும் உத்தரவுபெற்றுக்கொள்ளவேண்டி முதன் முதல் மாமியாரிருக்குமிடத்தையடைந்து அவளிடம் பிரியாவிடைபெற்றுக்கொண்டு தன் பிதாவிருக்குமிடத்திற்சென்று அவரைக் கண்டாள். அப்பொழுது அவர் என் குலதீபமே! உன்னுடைய அழகும் நற்குணமுமே ஜமீன்தாரின் நாயகியாம் பெரும் பேற்றைத் தந்தன. கடைசி முறையாக உனக்கு முன் நடந்தவைகளை இன்னும் ஒரு முறை நான் அறிவிக்கவேண்டியவனாக விருக்கின்றேன் எனலும், அவள் ஒருவிதமான பதறுதலும் நெஞ்சிடியுமுண்டாக வெளுப்பான முகத்தோடு மார்பின்மேல் கையை வைத்தாள். அப்போது

அருட்பிரகாசம் காதலின் ஞாபகார்த்தமாகக் கொடுத்தகணையாழி இருப்பதை அருளானந்த முதலியார் கண்டு ஆ! மகளே! நீ இப்பொழுது கன்னியமும் பெருந்தன்மையும் பொருந்திய ஜமீன்தாருடைய பத்தினியாகவிருக்கின்றாய்; அதனால் பெறற்கரிய பெரும்பாக்கியங்களையெல்லாம் அனுபவிக்கும் அதிர்ஷ்டசாலியாய் விட்டனை. உனது நாயகனுக்கு முற்காரியங்களொன்றும் தெரியா. நீ புத்தியுள்ளவளாயும் அவர்மீதுபட்சமுடையவளாயும் இருக்கவேண்டுமானால் அதைஉன்னுடைய இரகசியமாகவைத்துக்கொள். அல்லது அப்படியொன்றிருந்ததாக எண்ணவேஎண்ணாதே என்றார். அதற்கு அவள் பிதாவே தாங்கள் கூறியதை ஒருகாலமும் மறக்கமாட்டேன்; அதுஎன்னுடைய இரகசியமென அறிந்துகொண்டேன்; அதுபற்றி நீங்கள் இனிமேல் ஆலோசிக்க வேண்டாம்; நான் இப்பொழுது ஒரு பிரபுவின் நாயகியாய்விட்டேன்; அந்த நிலைமையை எப்பொழுதும் காப்பாற்றுவேன்; இன்னொருவரை நேசித்திருந்தேனென்பதை அவருக்கு ஒரு காலத்தும் எவ்வகையாகவும் காட்டமாட்டேன்; ஆனால் முன்னர் நேசித்திருந்தவரை இரண்டாம் முறை நேசிக்கவும் மாட்டேன்; அது உத்தமப்பெண்களுக்கு அழகல்லவே என்றாள். அதற்கு அவர் குழந்தாய்! உன்னுடைய வார்த்தையைக்கேட்கும்போது அ எனக்குத்துக்கமும்சந்தோஷமுமாகவிருக்கின்றது. உன்னுடையபுதிய நிலைமையை அவ்வளவுகவனித்துக்கொண்டாயென்றது எனது பாக்கியமே என்றார். அப்பொழுது பூங்காவனம் பிதாவே! தேவரீர் அடியாளைப்பற்றிக் கவலைப்படவேண்டாம்; எல்லாம்முடிந்துவிட்டன. எனக்குத் திருப்தியில்லாது போனாலும் நான் மனப்பூர்வகமாக ஒப்புக்கொண்டு விட்டேன். தங்களது எஞ்சியசீவியகாலமுழுவதும் மனச் சமாதானமான சந்தோஷத்துடன் இருத்தல் வேண்டுமெனச் சர்வேசுவரனைச் சதா வேண்டிக்கொள்ளுவேன் என்று பிதாவின் பிரிவாற்றாமைக் கிரங்கிக் கண்ணீர்சொரிய, அருளானந்தமுதலியார் பூங்காவனமே! நீ உன்னால் இயன்றவரை தைரியமாகவும் மனவமைதியுடனுமிருத்தல்வேண்டும் என்று அவளது கண்ணீரைத் துடைத்து, குழந்தாய்! என் குலக்கொடியே? பிதாவாகிய நான் உனக்குச் சொல்லவேண்டியவைகளெல்லாம் முடிந்துவிட்டன வாயினும், இன்னும் இரண்டொரு வார்த்தை யுண்டு. அஃதாவது உன்னுடைய நாயகர் உன்னை அழைத்துக்கொண்டு போவதற்கு ஆயத்தமுடையவராக விருக்கின்றார். சீக்கிரத்தில் உனக்கு முன்பாகச் சிலபெயர்

வழிகள் கூறப்படும்; அவை உன்னுடைய முற்காரியங்களை [illegible] கூறச் செய்யும். நீ அதை இலகுவிற் கண்டுபிடிப்பாய் இந்த விவாகத்தினால் உண்டான பந்தத்துவத்தை. அதுபற்றிக் காரியமில்லை. நீ எதுபற்றிக் கேள்வியுற்றாலும் இன்னுமொருவனுக்கு வாக்குக் கொடுத்திருந்தாயென்பதை உன்னுடைய நாயகன் அறியாமலிருக்கட்டும் என்னும். அவள் பிதாவே! நான் விவாகக் கிரியை நடந்தபொழுது எவ்வளவு தைரியமாக விருந்தேனென்பதைத் தாங்கள் நேரே பார்த்திருக்கின்றீர்கள்; எனது கணவர் சிறிதும் சந்தேகமுறாமல் நடந்ததையும் கண்டீர்கள். இவைகளினால் நான் எவ்வாறுபிற்காலத்தில் நடந்துகொள்வேனென்பதை அறிந்துகொள்ளுங்கள்; ஆனால் எனது நாவினாற்சொல்ல முடியாத பேரழகு நிரம்பிய அருட்பிரகாசத்தின் வடிவம் எனக்கு எவ்வளவு அருமையாக விருந்[illegible]லும் [illegible] அவர் நாம் ஆச்சரியமுறும்படி உ[illegible]ப்பெற்றுமுன்பாக வந்து நின்றாலும், இ[illegible] நாயகனுடைய பத்தினி நான் என்று மனம் வாக்குக் காயத்துட[illegible] கடவுளர் முன்னிலையிலும், அறிஞர்கள் முன்னிலையிலும் ஒப்புக்கொண்டதை மாற்றமாட்டேன். இது திண்ணம் என்றனள்.

பிதாவும் புத்திரியும் இவ்வாறு வார்த்தையாடிக் கொண்டு நிற்கும்பொழுது பூங்காவனத்தின் அத்தை மங்களம், அவர்கள் நின்ற அறைக்கதவைத் திறந்துகொண்டுஉள்ளேபோய்க்குழந்தாய்! நீ செல்லுதற்காக வண்டி காத்துக்கொண்டிருக்கிறது; சீக்கிரம் புறப்படென்று துரிதப்படுத்த; அவள் தகப்பனையும்மாமியாரையும் தழுவி முத்தமிட்டுப் பிரியா விடைபெற்று நாயகராகிய ஜமீன்தார் நிற்கும் இடத்தையடைந்தாள். அங்கு நான்குகுதிரைகள் பூட்டப்பட்டதும், தத்துவ உடையணிந்த இருசாரதிகள் அமையப்பெற்றதுமான ஒரு வண்டி நின்றது. இவர்களிருவரும் வாயிலில் வந்தார்கள். அப்பொழுது பதினெட்டு வயதுள்ள ஒருகைம்பெண் முண்டிதஞ்செய்யப்பட்ட சிரசினின்றும் குருதி கொப்பளிக்க "ஐயோ! என்னைப்போலும், பெரும்பாவி அகிலத்திலெங்குமில்லையே! அநியாய மநியாயம்! என்பெரும் பாதகத்தை யார்பாலெடுத்தோதுவேன்" என்றுகூறிக்கொண்டு இவர்கள்நிற்கும் வீட்டுவாயிலுக்கும் குதிரைவண்டிக்கும் மத்தியில் விழுந்து மயங்கிவிட்டாள். இதைக்கண்ட பூங்காவனம் திடுக்கிட்டு இச்சகுனம் கெட்டதாக விருக்கின்றதே; இதன் பெறுபேறு யாதாய் முடியுமோ என்று

30 MADRAS

ஆலோசித்துக்கொண்டு நிற்கும்பொழுது, இவற்றைக்குறிப்பாலறிந்த நாயகர் துரிதமாக நாயகியின் கையைப்பிடித்து வண்டியிலேற்றிப் பக்கத்தே யிருத்தி யருளினார். சிறிதுநேரஞ்சென்றபின் வண்டிபுறப்பட்டு இரத்தினபுரியைக்கடந்து செல்லுகின்றது. சிறிதுநேரஞ் சென்றபின் பூங்காவனம் பிதாவானவர் தன்னைப்பிரியும் பொழுது தனிமையிற் கூறியவகைகளையும் மற்றும் தனது முன்னிலைமைகளையும் ஆலோசித்துக்கொண் டிருக்கும்பொழுது, ஜமின்தாராகிய வீரசிங்க முதலியார் "எனது சொர்ண மாளிகைக்குச் சீக்கிரம் செலுத்துங்கள்" என்று சாரதிகளுக்குக் கூறினார். இதைக் கேட்டவுடன் அவளுக்குத் திடுக்காட்ட முண்டாய்முகக்களை மாறிவிட்டது. பூங்காவனம் அதை நாயகர்காணாதபடி முகத்தைவண்டியின் சாளரப் பக்கமாகத் திருப்பித் தன்னுள் எண்ணியதாவதுமுன் அருட்பிரகாசம் விட்டுப் பிரியும்பொழுது தான் தங்களுக்குடையதாகிய சொர்[illegible]ளிகைக்குச் செல்வ[illegible]ச் சொல்லிப் போ[illegible]. அப்படியாயின், குறித்த வீடு எனது நாயகராகிய [illegible]ருக்கு எப்படி வந்ததோவென ஆலோசித்துக்கொண்டிருக்கும்பொழுது, ஜமின்தார் அவளது முகமாறுபாட்டைக்கண்டு கண்மணி! எனது சொர்ண மாளிகையில் பகிரங்கமில்லாமல் நாம் தனிமையாகச் சிலகால மிருக்கலாம். அஃது உனக்குவிருப்பமில்லாமலிருக்குமோவெனலும், அவள் ஐயா! தங்களுக்கு விருப்பமான இடம் எனக்கு விருப்பமில்லாமல் இருக்கமாட்டாது எனக் குயிலும்நாணும்படி கூற, ஜமின்தார் என் உயிரினு மினிய பூங்காவனமே! நீ இவ்வாறு கூறியதற்கு நன்றி யறிதலுள்ளவனாக விருப்பேன். இன்னும் சிலமணிநேரத்துக்குள் எனது உறவினரின் மத்தியில் கொண்டு போகப்படுவாய். அதன்பின் அந்த வேடிக்கைகளும் கொண்டாட்டங்களும் நடக்கும் ; எனது மாமனாரையும் உனது அத்தையையும் அப்பொழுது அழைப்பிப்போம். இனிமேல் நீயே அந்த வீட்டிற்கு எசமானியாக விருப்பாய். மலைக்காட்சி, மலையருவிக்காட்சி, மலர்க்காட்சி, மலர்க்கொடிக்காட்சி முதலிய இயற்கையின் அரிய காட்சிகளைத் தன்னுளடக்கிப் பிறர் வாழ்வைப்பொறாது புறங்கூறித்திரியும் கீழ்மக்களது மனம்போலஇருண்ட இந்தக்காட்டைக்கடந்து விட்டோமானால், சுமார் நாலுமணி நேரத்துள் எமது சொர்ணமாளிகையைக் கிட்டிவிடுவோம் என்றார். சிறிதுநேரஞ் சென்றபின் வண்டி ஜமின்தாரின் வீட்டு வாயிலில்வந்து நின்றது. முன்ன

ரே அவாது கட்டளைப்படி காரியக்காரர்கள் அகன்று விசாலித்த அரண்மனை யிடங்களைபெல்லாம் இந்திரசபைபோல

"மூன்வாயின் முகமெல்லா முத்தடுத்துத் தாமரை வெண் முளைகள் பாய்த்து, மின்வாப மணிக்கவசம் பொற்செந்நெற் கதிர் சூட்டிவிளங்க வைத்துப், பொன்வாழை மரகதப்பைங் கமுகொடு தோரணம் வாயல் புணாநாட்டி"

அலங்கரித்து வைத்திருந்தார்கள்.

மா. சிவராமலிங்கம் பிள்ளை,
"ஆறுமுகநாவலர்" வாசகசாலை.

வல்லாள மஹாராஜன் சரித்திரம்.

(முன்தொடர்ச்சி)

நாரதர் அகமகிழ்ந்து பொருந்தலைப் போரில்வென்று புரை யிலாப் புகழ்பெறும் பூபதிதன் எழிற்றுணைவியரே! சுபம், சுபம். தற்பரனுறையுந் தலங்கள் தரிசித்தும், ஒப்பில்லாதபல தீர்த்தங் கள்மூழ்கி மூர்த்தியை முறையாகவணங்கிப் பற்பலநாடுகளில் உலா விவருநாளில், வல்லாளமன்னன் புரையிலாப்புகழைப் பேசக்கேட்டு நாம் அன்னவனை நேரேகாண நனிகாதற்கொண்டு இவணுற்றோம்; மன்னனைக்கண்டனம்; ராஜமுறையும் நீதிமுறையும் சிலவுரைத் தனம்; அம்மன்னவன் விடைகொண்டு நும்மைக்கண்டேம்; களி கூர்ந்தேம் என்றனர். இதுகேட்டதலைவியர் மாசறுமாதவா! சிறு மதியுடைய எமையுமொரு பொருட்டாகத் திருவுளத்தில் மதித்து இவணெழுந்தருளியவாறு அறியவிருப்புடையோம் என்றுசொல்லி வணங்கிக் கைகூப்பிநின்றனர். நீதிநூலறிந்து நேரியாகச் செங் கோலியற்றும் மன்னவன் துணைவிகாள்! உமக்குமொரு நெறி புகல்வதின்றாயினும், உரைப்பதுமுறையாதலின், உரைப்பம்கேண் மோ? நன்னெறியொன்றே நோக்கும் வல்லாளன் தன்னுருயிர் போல் மாசறும் அறம்ஒன்றே கைக்கொள்ளுகின்றான். அறத்திற் கோர் ஊறுவருதற்றுழித் தன்னுரைபிறழும்; உரைபிறழின் தன்னு யிரும்துறக்கவரும். ஆதலின் சொன்மொழிபிறழாது கொண்ட விரதங் குலையாது நிலைநாட்ட இல்லறத்துணைவியராய நுங்கள் நற் குண நற்செய்கைகளே அவனது உயிர் ஓங்கக்காரணமாகின்றன. அறம் வழுவாது இயற்றநினைத்த வல்லாளன்பால் எஞ்ஞான்றும் இஞ்ஞான்றேபோல் உள்ளமொத்து உண்மைத் துணைவியராக

இருத்தல் வேண்டும். கொண்டவன் குறிப்பறிந்து நடக்கும் கொள்கை கற்பினர் கடமையாகும். நன்மதிநங்கையர்காள்! கண்ணுதற்பெருமான் கருணையால் கசடறப்புரியும் அறத்திற்கு இடையிலாவாறு காத்து அருள்புரியுமாறு அல்லும் பகலும் அண்ணாமலையான் அரும்பாதமே உம்மகத்தில் கொள்ளவேண்டும். மங்கலம்காக்கவும், எம்மனோர் மகிழவும், தென்புலத்தார் தேகம் நுகரவும், அறநெறி தழைக்கவும், அமலனாலயம் விளங்கவுமான பொதுநலத்தின் பொருட்டே பூபாலன் புரையிலாப் புண்ணியச் செயல் புரிகின்றான். புனிதனருளால் புந்தியிற் கொண்ட கருத்து முற்றுப் பெறும். கவலைகொள்ளீர். விரிசடைப் பெருமானுறையுங் கயிலையினின் றிப்புவியடைந்து பலநாளாயின. எம்பெருமானை இன்றேபோய்த் கண்டுதரிசித்தல் வேண்டும். யான்போகவிடைதருவீர் என்றனர். மின்சடையீர்! தங்களாணைபோல் தரணிபதி செய்யும் வினைகளுக்கெல்லாம் மனமொத்து நடக்கவே கருதியுள்ளோம்; அது முடிவுபெறத் தேவரீர் ஆசீர்வதிக்க வேண்டும்; எமதில்லம் போந்து எமக்குத்தரிசனந்தந்து யாமுய்யுநெறி உபதேசித்தவாய செய்யாமற்செய்த உதவிக்காக உள்ளன்போடு வந்தனை செய்வதன்றி வேறுயாது யாம் கைம்மாறியற்றவல்லோம்? அருவுருவாய்நிற்கும்பெருமான் கழல்கள்வணங்கத் தேவரீர் திருவுள்ளங்கொண்டதால் இப்புண்ணியச்செயலுக்கு யாது தடையுளது என்று தக்கவாறுரைத்து வணங்கி நின்றனர்.

பிறகு நாரதமுனிசிரேட்டரும் ஆசி கூறி விடைபெற்று அந்தப்புரம் நீங்கிவாயிற்கடந்து வீதியிற்போந்தனர். தாம் போகும் மார்க்கத்தில் நடைபெறும் வரைகடந்த நல்லறங்களை யாவுங்கண்டு வல்லாளனைப்புகழ்ந்து உவந்து இச்செயல்கள்யாவும் ஆவியுளாவியாக விளங்கும் ஐயனுக்கு அறைதல் வேண்டுமென உன்னினார்; இந்நாடு நீங்கிப்பாதையிலுள்ள பதிகள் தரிசித்தும், துறைகள் மூழ்கியும், ஆங்காங்குள்ள தவத்தினர்பால் அணுகிப் பேசவேண்டுவன பேசியும், சோலைகளிற்றங்கியும், பலநாடுகடந்து மால்விடையேறும் பெருமானுறையும் வெள்ளியங்கிரியை யடைந்தனர்.

அவர் நந்தி யெம்பெருமானை வணங்கி விடைபெற்று வாயில் கடந்து விரைவிற் போய்ப் பலகோடி தேவர் தொழுதேத்தவும், பொன்னகர்ப்புரத்தான் போற்றித்துதிக்கவும், குடங்கைப்பொருநன் குமாரனால் அறிந்தவிதியோன் முடிதாக்குறவணங்கிப் போற்றவும்

திருநடனம் புரிந்த தேவாதி தேவதேவே! என வைகுந்தப்பெருமாள் அகம்பாவம் நீங்கி வாழ்த்திவணங்கித் துதிக்கவும், ஐம்புலன் வென்ற அடியவர் பலரும்போற்றி நிற்கவும், பதினெண்கணங்களும் பணிக்கெதிர்நோக்கி நிற்கவும், மூச்சுட ரொளிவென்ற கனகமயமண்டபத்தில் வீற்றிருக்கும் பெருமானை, இருகண்களால்கண்டு களித்துவிழுந்து எழுந்து கண்ணீர்மல்கமனங்கசிந்துருகி மெய்பொடுங்கவாய்நடுங்கக் கைகுவித்து உடலாய், உடலுளுயிராய், உயிர்செயும் வினையாய், அவ்வினைப்பயனும் நின்றாய் நின் திருத்தாள் போற்றி; ஆணுப் பெண்ணுய், அலியாய், அகிலமாய், அகிலப்பொருளாய், எங்கும் நிறைந்து எவர்க்குங்காணற் கரியாய் நின் திருத்தாள் சரணம்; மங்கைமார்பினனும், மலர்மிசை மேவினவனும் தாம்தாம் பரமென்றுன்னிப் பொருத அவர்க்கெதிர் வந்து அடிமுடிகாணற்கரியதாய் வானளாவும் வன்னியாய் நின்றாய் நின் கழல்கள்போற்றி; போற்றி எனத் துதித்து வணங்கி யொருபுறமொதுங்கி நின்றனர். பொன்னுர்சடை முடியெம்பெருமான் நாரத முனிவர் துதியனைத்தும் செவிசாய்த்துக் கேட்டுப் பின்வருமாறு திருவாய்மலர்ந்தருளினர்:— கிரிபிறசிந்தையாய்! நம்மடிபால் அன்பு பூண்டோய்! யாதோ ஒன்று நின்னகத்திற்குறித்து ஈண்டடைந்தனைபோலும். அதுநம்பால் உரைக்கற்பாலதோ? என்றார். இதனையிறைவன் கழறுமுன்னமே முனிபுங்கவர் உயிர்க்குயிராய் அமர்ந்த எம்மிறைவா! நின் திருவடிக்கு விண்ணப்பம் ஒன்றுண்டு; வெள்ளியங்கிரிநீத்து மகிதலமடைந்து அன்பர்க்காகத் தேவரீர் இயற்றிய திருவிளையாடற்றிருப்பதி பலவற்றில் தென்னுட்டிற் சிறந்ததாய், சிரியோர் மதிக்குஞ் சீலமதாய், அரியும் அயனும் அகம்பாவ நீங்கி அருள்பெற்றதாய திருவருணையம் பதியின்கண் அறநெறிபிறழாக் குடிகளோடும், செய்வன அறிந்துசெய்யும் அமைச்சரோடும், குறிப்பறிந்தொழுகும் தேவியரோடும், சொன்மொழி பிறழாத வல்லாளனெனும் ஓர் அரசன் பெரும்பேறு பெற்றுள்ளான்.

(வரும்).

ப. மு. கோகிலாம்பாள் அம்மாள்.

The Late Justice- Mahadeva Govinda Ranade C. I. E., Bombay.

காலஞ்சென்ற ஜஸ்டிஸ் மஹாதேவ கோவிந்தரனடே அவர்கள் C I E,

(Life Sketch)

பம்பாய் ஹைகோர்ட் நியாயாதிபதியாய் இருந்து இந்தியா முழுமையும் ஒரு சிறந்த ஆபரணம் போன்று விளங்கிய ஜஸ்டிஸ் மஹாதேவ கோவிந்த ரனடே அவர்களைப்பற்றி யறியாதார்யாரே. மஹாராஷ்ட்ர வமிசத்தைச் சார்ந்த இவர் தந்தை கோலப்பூர் சமஸ்தானத்துத் திவானவர். தமது குலஞ்செய்த நற்றவப் பயனால் பம்பாயில் 1842ம் ஆண்டில் இப்பெரியார் ஜனித்தார். "தம் பொருளென்ப தம்மக்கள் அவர்பொருள் தத்தம் வினையான் வரும்" என்னும் பொய்யாமொழி இவர்பால் மெய்யாகி நின்றது. அத்தகைய புத்திரப்பேறடைந்தநற்றாய்தந்தையர்வறியன்கண்ட மாநிதியென்னத் தம் சிறுகுழவியை நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாய் வளர்த்துத் தம் சுதேச பாஷையை யவர்க்குக் கிரமமாகக் கற்பித்து, அவர் ஆங்கிலப் பாஷையையுங்கற்கச் செய்தனர். தமது இளம் பிராயத்திலேயே பெரும்பட்டதாரியாய் இவர் விளங்கினர்.

மஹாதேவ கோவிந்த ரனடேயவர்களது குணவிசேஷங்கள், அவர் பள்ளியில் பயின்றொழுகு நாளிலேயே குன்றின்மேலிட்ட விளக்குப்போன்று பிரகாசிக்கலாயின. "முயற்சி திருவினையாக்கும் முயற்றின்மை, இன்மை புகுத்தி விடும்" என்னும் முதுமொழியைப் பொதுவழி யாக்காது, தமக்கே திருவள்ளுவர் கூறினதாகக் கொண்டு உறுதியோடும் ஊக்கத்தோடும் கற்றுவந்தார். அவர் கற்குங் காலத்தில் ஆர்வத்தோடு ஆசிரியர் கூறுவதை விடாது அகக் களத்தில் நிலைபெறச் செய்வர். இங்ஙனம் கற்றதால் ஆங்கே இவரது அபூர்வ சக்தியும் திறமையும் பிரகாசிக்கத் தொடங்கின. அப்பொழுது ஆரம்பித்த அந்த அழியா நற்பிரகாசம் தினேதினே மேற்கிளம்பித் தனது எல்லையின் உச்சத்துச் சென்று பூவுலகெங்கும் புகழொளி பரப்பிப் பூமிதேவிக்குத் திலகம் என்னும் இந்தியா முழுதும் அதனது

எண்ணில்லாக் கிரணங்களை விரித்து ஓங்கி வளரவைத்தது முழு முதற் பெருமானுடைய திருவருளென்றே கூறவேண்டும். அவர் படித்த ஆண்டோசொற்பம்; எடுத்த பரிசோ நூறு. அடுத்த கீர்த்தியோ கோடி. இஃதன்றோ பெரும் பாக்கியம்! இவர் பெரிய பட்டப் பரீட்சையிற் றேறிப் பாடசாலையை யகன்றதுதான் தாமதம். இவரது குண விசேஷங்களை யறிந்திருந்த வித்தியாதிகாரிகள் இவருக்குத் தமது இலாக்காவில் உயர்பதவி உத்தியோகமொன்றைத்தந்தனர். மிஸ்டர் ரனடே யவர்கள் 20 வருஷகாலம் உழைத்துக்காண்பித்த அபூர்வகாரியங்கள் வாசாமகோசரமாம். பின்னர், ரெவினியூ, ஜூடிஷியல் அதிகாரங்கள் பல செலுத்தி ஸப்ஜட்ஜ், ஸ்மால் கோர்ட் ஜட்ஜ பதவிக்கு வந்து கனம் ஜஸ்டிஸ் "திலாங்" இறந்தபின் அவருடைய ஸ்தானத்தில் பம்பாய் ஹைகோர்ட் ஜட்ஜாக இவர் நியமிக்கப் பட்டார். "இறைகாக்கும் வையக மெல்லா மவனை, முறைகாக்கு முட்டாய்ச் செயின்" என்னும் மெய்ம்மொழியை நமது ரனடே யவர்கள் ஐயம் சிறிதேனும் இன்றி நல்லிசைப் புலவரிடத்து உணர்ந்தவராகலின், அனுத்தினமேயனும் நடுநிலைமையிற்றவறாது தயாநிதிக் கடவுளுக்கும் மனச்சாட்சிக்கும் பயந்து, குற்றஞ் செய்தாரை பொறுத்து, அவர்களாற் றுன்பெய்தித் தம்மை வந்தடைந்தவர்களின் றுயரைக் களைந்து, நீதிபதிகட்கெல்லாம் அதிபதியாக விளங்கினர். பம்பாய் இராஜதானியின் மக்களில் நீதிபதி ஸ்தானத்தில் சீருஞ் சிறப்பும் பொருந்தியவர்களுள் மஹாதேவ கோவிந்த ரனடேயவர்களும் ஒருவராவர்.

அப்பெரும் பதவியை யடைந்து நீதிசெலுத்தும் அதிபர்கள் செய்யுங் காரியங்கள் யாவும் தெய்வத்தன்மை பொருந்தியவை யென்பதை நமது ரனடேயவர்கள் செவ்வனே உற்று உணர்ந்த மேதையாகலின், தாம் வீற்றிருந்து நீதிமொழியும் ஸ்தானத்தை "நியாயத் திருக்கோயில்" என்பாராம். இவரது சாமார்த்தியத்தை க்கருதியே இவர்க்கு C. I. E. பட்டமும் அளிக்கப்பட்டது. பிரிடிஷ் கவர்மெண்டாருக்கு நாம் எல்லோரும்ஐக்கியப்பட்டு, மதுவையுண்டு களிக்கும் தேனீயைப்போன்று, அவர்கள் புரியும் நன்மைகளை யனுபவிக்கும் நாம் அவர்களுக்கு எவ்வளவு நன்றியுள்ளவர்களா யிருத்தல் வேண்டும் என்பதைப் பற்றி எவரும் இனிது அறிய சொன்னயம் பொருணயம் விளங்க வாக்கு தாட்டிகம் நிரம்

பப்பெற்ற ரனடே யவர்கள் தெளிவாய்ப் பல சமயங்களில் பிர சங்கிப்பது முண்டு. இராஜாங்க விஷயம், தேசவளம், மதாசாரம், ஜனசாரம்,கல்வியபிவிர்த்தி,செல்வநூல் முதலிய சீர் திருத்த விஷ யங்கள் முதலான பல ஆழ்ந்த துறைகளில் அவர் இறங்கி அவ்வத்துறையில் அவருக்கு மிஞ்சியவர் இந்தியாவில் யாரும் இல்லை என்னும்படி தமது மதி நுட்பத்தால் அபூர்வ சக்தி காட்டி விளங்கினர். இராஜாங்க சீர்திருத்த விஷயமாய்ப் பெரும் காங்க்ரெஸ்கள் கூடினுல் அவரன்றி பேசாறுவு மசைபாது. ஜன சார விஷயத்தில் இவர் உழைத்த விதத்தை என்னென்று உரை ப்பது? தற்காலப் போலிப்புலவர் போன்றிராது சுதேச பாஷாபி விர்த்தி விஷயமாக இவர் எடுத்துக்கொண்ட முயற்சியை ஆயிர நாக்களுடைய ஆதிசேஷனும் சொல்லத்திறன் அல்லன். சென்னை யில் சுதேச பாஷாபிவிர்த்தியைப் பற்றித் தருக்கமுண்டான கால த்தில் கல்வியிலாக்காவில் 20 வருஷகாலம் உழைத்து வந்திருந்த தமது அநுபவத்தைக்கொண்டு இச்சென்னையில் எடுத்தமுயற்சி தற்சமயம் பயன்தரா தொழிந்தது எவரும் விசனிக்கத் தக்கதே யாம். இம்முயற்சி வீணே யெனினும் நமது ரனடே அவர்கள் இவ்வித அவக்கேடுகளுக் கெல்லாம் பயந்து ஆதைரியங் கொள்ள லாகாது எனத் தினேதினே வற்புறுத்திக் கூறுவர்.

இச் சத்புருஷர் தமது தேக அசௌக்யார்த்தம் 6 மாதம் ரஜா வாங்கிக்கொண்டு தமது இல்லத்து அமர்ந்து படுத்த படுக்கையில் நிற்க, பல பிரபல வைத்தியர்கள் பெரிதும் ஊக்க முற்றுச் சஞ்சீவிபோன்ற ஒப்பற்ற அருமருந்துகளைக் கொடுத்து வந்தனர். ஆங்குப் பரவிய சமாச்சாரப் பத்திரிகைகள் யாவும் தினம் ஜஸ்டிஸ் மஹாதேவ கோவிந்த ரனடே யவர்களது தேக சௌக்யார்த்தத்தைப் பற்றிக் கோரும் லக்ஷக்கணக்கான பிரஜை கள் மனம் திருப்தி யடையத்தக்க விஷயங்களை அடிக்கடி வெளி யிடும். ஒரு சமயத்து ஸஞ்சிகையில் மேற்கண்ட குறிப்பாய்க் காணுவிடில், பத்திராதிபர்களை என்னென வினவுவராம் அன்பே உருவமாய அவ்வரும் பிரஜைகள். இத்தகைய ஜனசமூகத்தின் நடத்தை அம் மகான் பால் உள்ள அந்தரங்க அன்பும் பக்தியும் உள்ளங்கை நெல்லிக்கனிபோன்றும் குன்றின்மேலிட்ட விளக்குப் போன்றும் இனிது வெளியாக்குகின்றதன்றோ?

(வரும்.)

விவேகாநந்தம்.

Morality & Religion.

நன்னடக்கையும், சமயாசாரமும்.

"அவன் பரமயோக்கியன்; ஆனால் சமயாசார ஸம்பிரதாய விருத்தன்" என்றும், "இவன் மகாபிராமாணிகன், உதாரசீலன், பரோபகாரத்தில் தன் உயிரையும் கொடுக்கப் பின்வாங்கான்; ஆனால் இவனுக்குக் கோயில் குளம், ஜபம் தபம் வெகு தூரம்" என்றும் உலகத்தில் பலர் பேசிக்கொள்வதை நாம் எத்தனையோ முறை கேட்டிருக்கிறோம். இப்படி வியவகரிப்பவர்கள் நற்குணம், தூய்மை, நேர்மை வேறு, சமயாசாரம் வேறு என்னும் ஒரு குழப்பத்திற்குளகப்பட்டு மூழ்கியிருப்பவர்களாவர்.

உலகத்தில் வழங்கும் பலமதாசாரங்களில் ஏதாவதொன்றை வெளிப்படையாகக்கைப்பற்றி அதற்கேற்ற பூஜைகளை மாத்திரம் குறைவில்லாமற் செய்துவருவதே 'மதம்' என்று அர்த்தம் கொள்ளப்படுமாயின், "அவன் பரமயோக்கியன், சாத்வீக புருஷன்; ஆனால், சமயாசாரஸம்பிரதாய விருத்தன்" என்று சொல்வது, "வேறொருவன் அயோக்ய சிரோமணி, பஞ்சமகாபாதகன்; ஆனால், ஸ்நாநம், ஸந்தி பூஜைகளில் அணுவளவும் பிசகாதவன்" என்று சொல்வதை யொத்ததேயாம்; ஏனெனின், கொலைப் பாதகர்களும், தீவர்த்திக் கொள்ளைக்காரர்களும், பிறர்மனை நயப்பவர்களும் வெகு ஒழுங்காய் ஆலயத்துக்கேகிக் கடவுளை வணங்குவதை நாம் பார்க்கிறோமல்லவா?

மேற்சொன்னபடி ஸமயாசாரத்தை அர்த்தம் செய்துவிட்டால் பகவத்கீதை உபநிஷத்களும், புத்த பகவானுடைய உபதேசங்களும், ஏசுக் கிறிஸ்து மலையின்மேலிருந்து செய்த பிரஸங்கமும் (Sermon on the Mount), திருவள்ளுவநாயனார் திருக்குறளும் மற்ற நீதிக்ரந்தங்களும் நிஷ்பிரயோஜனமானவைகளாக முடிவதன்றி நமக்குக்காரண காரிய வித்தியாஸம் தெளிவாய் ஏற்படவில்லை யென்றும் வெளிப்படும்.

சமயாசாரம் என்பது ஒருவன் தான் வழிபடும் கடவுளுக்குப் பூஜைசெய்து தன் குலாசார ஸம்பிரதாயத்தை அனுஷ்டிப்பது மாத்திரமன்று. இதனால் நாம் பூஜை முதலிய அனுஷ்டானங்கள் அநாவசியகமாம் என்று சொல்லவரவில்லை. அதிலும் ஆழ்ந்து யோ

சிப்பவர்கள் புத்திக்கெட்டக்கூடிய நீதிகள் பலவிருக்கின்றன. ஆனால், பொதுவாய் ஸாதாரண ஜனங்கள் அதைத் தெரிந்து கொள்ளுவதில்லை. அதற்குவேண்டிய ஸாவகாசமிருப்பவர்களுக்கு ஊக்கமும் ஊக்கமுள்ளவர்களுக்கு ஸாவகாசமும் இருப்பதில்லை. ஸத்தியம், தர்மம், தயை, சாந்தி, க்ஷமை இவைகளை யடைவதல்லவா மதத்தின் பயன்? இவைகளை மனிதன் அடைவதற்கேயல்லவா உலகத்தில் எண்ணிறந்த மதங்கள் வழிகளாயிருக்கின்றன? நன்னடக்கையைக் கைவிட்டுச் சமயாசாரத்தை மாத்திரம் உறுதியாய்க் கடைப்பிடிப்பவன் தான்போய்ச் சேரவேண்டியநகரத்தைக் கருதாது வழியிலேயே அசையாமல் உட்கார்ந்திருப்பவனே!

இதர விஷயங்களிலுள்ளது போலவே மதத்திலும் நாம் அடைய வேண்டிய கதிவேறு; அதையடையும் மார்க்கம் வேறு. கடவுள் ஒருவர் உண்டென்னும் நம்பிக்கை, அவருக்குச் செய்யும் பூஜை, ஜாதிமதக்கட்டுப்பாட்டுக் குட்பட்டொழுகுதல், இவை முதலியவைதாம் நாம் செல்லவேண்டிய மார்க்கம்; நீதி, தர்மம், தூய்மை, சாந்தி இவை முதலியவைகளே நாம் அடையவேண்டிய கதி. மார்க்கங்களோ எண்ணிறந்தவை; அடையவேண்டிய பதமோ ஒன்றே. அஃதாவது கடவுளின் அம்சங்களாகிய ஸத்சித் ஆநந்தம் நம்முடைய மனோவாக்குக்காயங்களில் விளங்குவதே.

மேற்சொன்ன நிலைமையை அடைந்த பரமஹம்ஸன் நம்மைப்போல வெளிக்கு ஏதோ ஒரு மதக்கோட்பாட்டை யனுஷ்டிப்பவனாகக் காணப்படாவிடினும், ஸகலமதங்களின் ஸாராம்சங்களைத்தான் ஸதாகாலத்திலும் ஸர்வாவஸ்தையிலும் அனுஷ்டித்துக் கொண்டேயிருக்கிறான். அவனிடத்திலுள்ள மகாத்மியம் உலகத்திலுள்ள துன்பம், பிணி முதலிய இருளைத்தொலைக்கும் ஒரு பெருஞ்சுடராய் விளங்குகிறது. நன்றாய்ப்பழுத்து முதிர்ந்த கொப்பரையை அனுபவிப்பவனுக்கு எப்படி அதன் மேல் மூடியிருக்கும் ஓடு அநாவசியமோ அப்படியே ஆத்மதரிசனம் பெற்ற இந்தயோகிக்குச் சமயாசார பேதங்கள் அநாவசியமாயினும், கொட்டை முதிரும்வரையில் எப்படிமேல் ஓடு அவசியமோ அப்படியே ஆத்மதரிசனம் ஸித்திபெறும் வரையில் ஸம்பிரதாய அனுஷ்டானங்கள் அவசியமே. சதைக்கு வெளியில் வளர்ந்து வராத நகத்தை அறுத்தால் நோவுண்டாவதுபோல முடியும் ஜீவன் முக்த நிலைமை வருவதற்கு முன் ஒருவன் சமயாசாரத்திலிருந்து விலகுவது.

நாம் மேற் சொல்லி வந்தவைகள் பிறரை ஏமாற்றிப் பேருக்கு வெளி வேஷம் போட்டுப் பாடுபட்டுவிட்டு யாருமறியாவிடத்துத் தம்மனம் போனபடி நடப்பவர்களையோ, பினல்கோட்டுக்குள்ளாகாதவரையில் தாம் செய்வது பிசகல்லவென்று கருதுபவர்களையோ, 'நான் மகா யோக்கியன்' என்று தம்மைத்தாமே புகழ்ந்து கொள்ளுபவர்களையோ (தற்புகழ்ச்சியே ஸகல நற்குணங்களையும் திரையிட்டு மறைத்து விடுமல்லவா?) குறித்தல்ல. பிறரிடத்தில் குற்றம் பாராட்டும் சக்தியை அடியோடு ஒழித்து, எவ்விதப் பிரதி பிரயோஜனத்தையும் கருதாது, உலகநன்மைக்குப் பாடுபடுவதும் ஸர்வாவஸ்தையிலும் ஸர்வபிராணிகளிடத்தும் அன்பே உருக்கொண்டவர்களாய்த் தங்களைச்சுற்றி நாலாபக்கத்திலும்அன்பான எண்ணங்களையும், அன்பான வார்த்தையையும், அன்பான செயல்களையும்அள்ளியிறைக்கும் பதவியா வேண்டும்என்ற நோக்கத்தையே தங்களுடைய ஸாயுஜ்ஜியம் என்று உழைப்பவர்களையே கருதி எழுதினோம்.

ஒருவன் தான் கிறிஸ்தவன் என்றோ, பௌத்தன் என்றோ, ஹிந்து என்றோ அல்லது வேறு எந்த மதஸ்தனென்றோ பெயரிட்டுக்கொண்டு அயோக்கியனாயிருக்கலாம்; ஆனால், மேற்குறித்த பெயர்களில் ஒன்றைப்பூணாமலே பரிசுத்த ஹ்ருதயத்தோடு ஸத்தியவானாய் உதார சித்தமுடையவனாய் அழகான நடத்தையுள்ளவனாய் ஒழுகுபவனே கடவுள் குடிகொண்டிருக்கும் பரிசுத்த ஆலயமாவன். அவனைத்தரிசிப்பதே நமது துர்க்குணங்களை வேரோடறுக்கும் வழி. நாம்ஒவ்வொருவரும் அத்தகைய ஆலயத்தை நம் இருதயத்துள் கட்டி ஈசுவரனுக்குச் சமர்ப்பிப்பதே பெரும் தர்மமாகும். நமக்கும் உலகத்துக்கும்நாம் செய்துமுடிக்கக்கூடிய நன்மை இது தவிர வேறொன்றில்லை. சாதாரணமாய் உலகத்தில்இலட்சக்கணக்கான திரவியத்தைச்செலவழித்துக்கட்டப்படும் கோயில் எவ்வளவோ உபயோகமாயினும் அதைவிட அளவிறந்த மேம்பாடுடையதாகும் நாம் மேற்குறித்த ஆலயத்தைக் கட்டிமுடிப்பது. இந்த நோக்கத்தை மனதிலிருத்தி ஒழுகிவர எல்லாம்வல்ல இறைவன் நமக்கு அருள்புரிவாராக.

K. அரங்கசாமி அய்யங்கார்.

* The Knapsack.

காதரைன்.

நாடகப் பாத்திரங்கள்.

கவுண்ட் ஹெல்மார்:—ஸ்வீடன் தேசத்திய பிரபு.

கிறிஸ்டியர்ன்:—ஸ்வீடன் தேசத்து ஸோல்ஜர்.

அலெப்ட்ஸன்:—கவுண்ட் ஹெல்மாரின் விகடன்.

தாமஸ்:—வேலைக்காரன்.

எலினோரா:—கவுண்ட் ஹெல்மாரால் விரும்பப்பட்டவள்; ஸ்வீடன் தேசத்துச் சீமாட்டி.

கிறிஸ்டினா:—ஹெல்மாரின் சகோதரி.

அல்ரிகா:—ஒரு வயது சென்ற வீட்டுக்காரி.

காதரைன்:—கிறிஸ்டியர்னின் மனைவி.

கேடக், அல்ரிக்;—காதரைனின் மகனும் மகளும் முறையே ஆவர்; அவர்கள் வயது முறையே ஆறும், ஏழும் ஆம்.

ஸார்ஜண்ட் ஒருவர், ஒரு ஜோல்ஜர்கூட்டம், நடனம்புரிபவரிற் சிலர், ஒரு சேவகன்.

1. அங்கம்.

முதற் களம்.

இடம்:—ஸ்விடனில் ஒரு சிறிய வீடு.

காலம்:—நடுப்பகல்.

பாத்திரங்கள்:—அழகிய முகமும் இளம் பருவமும்வாய்ந்த 'காதரைன்' என்ற நாமமுடைய ஒருமாது. இவள் துணி நெய்யும் இயந்திரத்தின் பக்கலில் உட்கார்ந்திருக்கிறாள். முறையே 6-7 வயது கொண்ட குழந்தைகளிருவர் (சிறுவனும் சிறுமியும்) தரையில் உட்கார்ந்து பகற்போஜனத்தையுண்கின்றனர்.

காதரைன்:—

(நெய்துகொண்டே பாடுகிறாள்).

* இதன் பொருள் 'மடிஸஞ்சி' அல்லது ஸோல்ஜர்கள் பிரயாணத்திற்காக எடுத்துச்செல்லும் பையெனப் பொருள்படலால், அங்ஙனம் எழுதுதல் பொருத்தமாகாது என்பதையுன்னி நாடகத்தலைவியாகிய காதரைன் பேரை இந்நாடகத்தில் தமிழில் எழுதுகிறேன்.

இங்லீஷ் மேட்டு.

வாரும் வாரும் ஒல்லியிலே-வந்தெம்மைப் பாருமிவ் வெல்லியிலே
நாரும் பூவும் இருந்தாற்போல்-நாமிருவோரு மிருந்தோமே. (வா)

யுத்தம் யாவும் ஒழிந்தனவே-உலகம்யாவும் உவந்தனவே
நித்தம் உம்மை நினைக்கிறோமே-நீயி ரெம்மை நினைப்பீரோ. (வா)

வயலி லொண்டி யாயிருந்து-வாழ்வ தென்ன சுகந்தருமோ
அயலி லுள்ள வர்யாரும்-அன்புட னும்மை யேற்பதற்கே. (வா)

எல்லாம் வல்ல ஈசனருள்-நமக்கு இன்னும் வர இல்லையோ
கல்லா மூடர் போலவே நங்-கரையா மனது எதற்கேயோ. (வா)

அவர் வருவார் என்றிடிக்க-அன்பில் மிக்க அனைவரையும்
அவர் வருவார் என்றுரைப்பார்-அவர்தா னின்றும் வாஇல்லையே. ()

சிறுமி:—(தன் இருகைகளையுங் கொட்டிக்கொண்டே எழுந்திருந்து) அம்மா! அவர் வருவார்: அவரேவருவார் என்றாயே. நீ சொல்லுவது நம் அப்பாவைக் குறித்துத் தானே.

சிறுவன்:—அப்பா எப்பொழுது வருவார் அம்மா? எப்பொழுது? இன்றைக்கா? நாளைக்கா?

காதரைன்:—இன்றுமில்லை; நாளையுமில்லைபடா குழந்தாய். சண்டைக ளெல்லாம் முற்றுப் பெற்றன எனத் தெரிகிறபடியால், உங்கள் அப்பா கூடிய சீக்கிரம் வந்து விடுவார் என்பது தான் நிச்சயம்.

சிறுமி:—அம்மா! இதைக்கேட்க என் மனம் அதிக சந்தோஷம் அடைகிறது. அப்பா வந்ததும் என்னிடத்துள்ள நறுமலர்களில் கொஞ்சம் கொடுப்பேன்.

சிறுவன்:—(இன்னுஞ் சாப்பிடுகிறான்) நானே எனக்குரிய ரொட்டியிலும் வெண்ணெயிலும் கொஞ்சம் கொடுப்பேன். இப்பொழுது நான் அகோர பசியாயிருப்பதுபோல அப்பொழுது அவர் பசியாயிருந்தால் புஷ்பங்களைக் காட்டிலும் அதிக ஆவலாக அவைகளை ஏற்றுக்கொள்வாரல்லவா? வெகுவெகு தூரத்திலிருந்து அப்பா வருகிறபடியால், நான் நினைப்பது போலவே பசியுடன் வருவார் என்பதற்குச் சந்தேகமேயில்லை.

சிறுமி:—வெகு வெகுதூரம்! எவ்வளவு தூரம் அம்மா? அவர் எவ்வளவு தூரத்திற் கப்புறம் இப்போது இருக்கிறார்? எவ்வளவு தூரம்?

சிறுவன்:—எனக்குத் தெரியும், எனக்குத் தெரியும். அவர் பி-பி-பி-பி-பி-பின்லண்டி லிருக்கிறார். இது எவ்வளவு தூரம் அம்மா?

காதரைன்:—குழந்தைகளே! அநேக மைல்களுக்கு அப்புறம். இத்தனை மைல் என்பது என்றால் நிதானிக்கக்கூடவில்லை.

சிறுவன்:—அது போகட்டும். நமது விறகுக் கட்டுகளை விற்கப்போகும் அந்தப் பெரிய வீட்டிற்கு இரண்டுமைல் இருக்காதா? அம்மா!

காதரைன்:—ஆம் இரண்டு மைல் இருக்கும். நீ இப்போது அந்தப் பெரிய வீட்டிற்குப் போகவேண்டும், புறப்படு. அதன் வீட்டுக்காரியாகிய அல்ரிகா அம்மாளை நம்மிடத்து விறகு வாங்கின பணத்தைக் கேள். பணத்தைப் பெற்றுக்கொண்டதும் ஒரு ரொட்டிக்கடைக்காரனிடம் போய்க் கொஞ்சம் ரொட்டியும் வெண்ணெயும் வாங்கிவா. (சிறுவன் தலையில் தட்டிக் கொண்டே) ரொட்டியும் வெண்ணெயும் விரும்பும் நீ, அவற்றைப் பெற அதிகசிரத்தை எடுத்துக் கொள்ள வேண்டும்.

சிறுவன்:—சரி அம்மா! அவ்விதமே சிரமப்படுகிறேன். எனக்கும் அப்பாவுக்கும் (அவர் திரும்பும்போது) வேண்டிய ரொட்டியும் வெண்ணெயும் வேண்டுமே.

(சகோதரியை நோக்கி)

சகோதரியே! என்னுடன் வா. காட்டின் மார்க்கமாய் நாம் இருவரும் திரும்பும்போது, நாளைய தினத்திற்கு வேண்டிய விறகுகள் அகப்படும்; இடத்தைக் காட்டுவேன். ஒருவருக்கொருவர் உதவியாயிருக்கவு நேருமே வா.

சந்தோஷமாகச் சில பாட்டுகளைப் பாடிக்கொண்டே போகிறார்கள்.

காதரைன்:-(ஏகாந்தமாய்) என்னருமைச் சற்குணக் குழந்தைகளே! உங்கள் தந்தை திரும்பிவரும்போது உங்களைக் கண்டதும் அவர்கொள்ளும் பேருவகைக்கும் அளவுண்டாமோ?

(குழந்தைகள்விட்டுப்போனமீதியுணவைத்தான்உண்டவண்ணம்.)

இந்தச் சிறு போக்கிலிப்பைபல் அதிகப்பசியாயிருந்தபடியால் எல்லாவற்றையும் சாப்பிட்டு விட்டு எனக்கு ஒன்றும் மீதியாகவைக்காமல் போய்விட்டான். ஆனல் எனக்குவேண்டும் என்பதைத் தான் நினைத்திருப்பானனல், எனக்கே எல்லாவற்றையும் விட்டுவிட்டுப் போய்விடுவான். இன்றிரவு அவனை ஒரு பெரிய கிண்ணம் பால் அருந்தச் செய்வோம். நேற்று இரவுதான் போலிருக்கிறது, அந்தச் சிறுவன் தனக்குரிய பாலினுள்ள ஆடைகளைக் கடைந்தெடுத்து விட்டு, அதில் எனக்குப்பிரியம் உண்டு என்று எண்ணினவனுய் எனக்குக் கொணர்ந்து கொடுத்தான்—ஹோ! ஹோ! இவ்விதம் எவ்வளவு காலம் இருப்பார்களென்ற விஷயம் கடவுளே அறிந்ததாம். தற்போது என் கைப்பாடுபட்டால்தான் எல்லாம் உண்டு. எனக்குத் தான் முன்போலப்பலமிருக்கிறதா? அதுவுமில்லை. என் செய்வேன்! ஆனல் என் ஆருயிர் பர்த்தா திரும்பவும் வீட்டிற்குச் சௌக்யமாய் வந்ததும் எனக்குப்பலம் கட்டாயம் வந்துவிடும். எல்லாமும் எல்லாரும் அப்பொழுது தான் சிறப்படையக்கூடும்.

(தூரத்திலிருந்து வரும் டிராம் சத்தத்தைக் கேட்கிறுள்)

(திடீரென) ஹா:—இது என்ன? டிராம் சத்தம் போன்று காண்கிறதே! வெகு தூரத்திலிருந்து ஏதோ சமாச்சாரம் வருகின்றது. அக்கூட்டத்தார்களும் சமீபமாய் வருகிறுர்கள். (நாற்காலியில் சாய்கிறுள்) பேஷ்! அவர்களை இச்சத்தத்திற்குக்காரணம் யாதெனக்கேட்க என்னல் ஓட முடியாதா என்ன? (டிராம் சத்தம் வெகு உரத்ததாய்க் கேட்கிறதே) சீ! நான் ஒரு பேதை. இவ்விதம் இருந்தால் அவர்கள் போய் விடுவார்கள்! (வரும்)

விவேகாநந்தம்.

கேடுவான் கேடு நினைப்பான்.

ஒரு கிராமத்தில் ஒரு குடியானவன் வீட்டுப் புழைக்கடைக் குப்பை மேட்டில் அதிகாலையில் கோழியொன்று நின்று கூவிக் கொண்டிருந்தது. அப்பொழுது அவ்வழியே தற்செயலாய்ச் சென்ற ஒருநரி, அந்தக் கோழியை நோக்கி, "கோழியே! நீகூவுகிறது வெகு அழகாயிருக்கின்றது. காதுக்கு நல்ல இன்பந் தருகி

ன்றது. முன் உன்தாய் கூவும்பொழுது நான் கேட்டிருக்கின்றேன்; அது தன் இரண்டு கண்களையும் மூடிக்கொண்டு கூவும்; அஃது என் மனதிற்குப் பேரானந்தந் தரும். இன்றெல்லாம் கேட்டுக் கொண்டிருந்தாலும் இந்த இடத்தை விட்டுப்போக எனக்குமனம்வராது" என்று சொல்லிற்று. இதைக்கேட்ட கோழி "நானும் அவ்வாறே கண்ணை மூடிக்கொண்டு கூவுவேன்; இதோபார்" என்றுசொல்லித் தன் இரண்டு கண்களையும் இறுக மூடிக்கொண்டு கூவிற்று. நரி, அந்த க்ஷணமே கோழி யிருந்ததப்பை மேட்டின்மேல் தன் கால் சத்தப்படாமற் சென்று கோழியைக் கௌவிக்கொண்டு காட்டை நோக்கி வெகுவேகமாய் ஓடிற்று.

அவ்வாறு ஓடிக் கொண்டிருக்கும் அந்த நரியை அங்கே அப்போது வேட்டையாடிக்கொண்டிருந்த சில வேடர்கள் கண்டு தங்கள்நாய்களை அதன்மேல் உசுப்பி விட்டார்கள். நாய்கள் நரியைத் தொடர்ந்தோடின. தன்னை நாய்கள் தொடர்ந்து வருவதை யறிந்த நரிபயந்து, முன்னிலும் வேகமாய் ஓடிற்று. இப்போதும் அந்நரி கோழியை விடவில்லை. அதுகண்ட கோழி நரியைப்பார்த்து 'ஓநரியே! இந்தக்கோழி என்னுடையது. நீங்களேன்வீணே தொடர்ந்து வருகிறீர்கள்? பிறனொருவ னுடைய சொத்துக்கு நீங்களேன் ஆசைப் படவேண்டும்? நான் இதைவிடப் போகிறதில்லை என்று நாய்களைப் பார்த்துச் சொல்' என்றது. நரி கோழியின் தந்திரமறியாமல், நாய்களை ஓடிக்கொண்டே திரும்பிப்பார்த்து, "நீங்களேன்வீணே தொடர்ந்து வருகின்றீர்கள்? இஃதுஎன்னுடைய கோழியல்லவா?" என்றது. நரி வாய் திறந்ததும் கோழி கீழேவிழுந்து பறந்து போய் அருகேயிருந்த ஒரு மரத்தின் மேலுட்கார்ந்து கொண்டது. ஏமாந்துபோன நரி மரத்தினுச்சியி லிருக்குங்கோழியை அண்ணாந்து பார்த்தபடியே சமயந்தெரியாமல் திறந்த தன் வாயைத் திட்டிற்று. அதுகண்ட கோழி நானும் சமயமறியாமல் மூடிக் கொண்ட என் கண்களைத் திட்டவேண்டியது தான் என்று சொல்லிற்று இச்சமயம் பார்த்து நாய்கள் தபதபவென்று வந்து நரியின் மேற் பாய்ந்து அதைச் சின்ன பின்னமாக்கிவிட்டது.

இச்சிறுகதையினால் நாமறிந்து கொண்டதென்னவென்று கவனிப்போம்; நரி செய்த கேடு கடைசியில் அதற்கே சம்பவித்ததல்லவா? இதனால் "கெடுவான் கேடுநினைப்பான்" என்ற பழமொழியின் உண்மை நன்கு விளங்குகின்றது. இது வன்றிச் சமயந்தப்பி வாயைத் திறந்தல்லவா கோழி நாய்க்கு இரையாயிற்று. ஆகவே, சமயந்தப்பி வாய் திறப்பது தவறென்பதும் தெரிந்து கொண்டோமல்லவா? ஆகையால், சமயந்தப்பி வாய்திறக்கலாகாது.

குமரன்.

வர்த்தமானம்.

உலகமுற்றும் நடந்து சுற்றிப்பார்த்து வருபவர்.

அமெரிக்காவிலுள்ள நியூயார்க்கில் வசிக்கும் காப்டின்மால்பாக்னி யென்பவர் உலக முழுதும் நடந்து சென்று ஆங்காங்குள்ள அதிசயங்களை யெழுதிவெளிப்படுத்த முயன்றுவருகின்றார். இதுகாறுமிவர் வட அமெரிக்கா, தென் அமெரிக்கா, ஆஸ்திரியா, ஆப்பிரிக்கா என்பவற்றைச் சுற்றிப்பார்த்திருக்கின்றார்; கூடிய சீக்கிரத்தில் ஆசியாவிற்கு வருவார்.

பாம்புக் கடிக்கு மருந்து.

மிஸ்டர் வெஸ்டன் என்பவர் வாழைமரத்தைக்குத்தி, அதில் வடியும் சாற்றைப் பாம்பு கடித்திருப்பவர்க்கு மூன்றுநாள் விடாது கொடுக்கவேண்டும்; அதனால் எவ்விதவிஷமும் நீங்கும் என்று கூறுகின்றார்.

ஆமையின் தலையை வெட்டி யெடுத்துவிட்டால் அது 400 முழந் தூரம் நகர்ந்து செல்லுமாம்; அதன் ஈரலையெடுத்துத் தொங்கவைத்தால் அது பல நாளைக்குத் துடித்துக்கொண்டிருக்குமாம்.

போலீஸ் அக்கிரமச் செய்கை.

நைஸாம் ஸ்டேட் ரயில்வேயில் ஷராப் வேலையிலிருக்கும் ஒருவர் ரயில்வேஸ்டேஷனிலிருந்துதமதுவீட்டிற்கு ரயில்வே பணத்தை யெடுத்துக்கொண்டு போகும்போது, அவரை வழிமடக்கி அங்கிருந்த ஒரு போலீஸ் பியூன் கையைப் புடைத்தானும். அவரிப்போது ரயில்வே ஆஸ்பத்திரியில் சிகிச்சை செய்யப்பட்டு வருகின்றார். ஆஸ்பத்திரி சோதனையால் அவர் 60 70 அடி பட்டிருக்கின்றாரென்று தெரிகின்றது.

விக்கிரகங்க ளகப்பட்டன.

பட்டுக்கோட்டைத் தாலூக்காவிலுள்ள ஒரு கிராமத்தில் ஒரு புன்செய் நிலத்தில் மண்வெட்டியபோது நடராஜா முதலிய 8 விக்கிரகங்கள் அகப்பட்டன.

பழைய எலும்புகள்.

சஸ்கச்சிவான் என்னுமிடத்திற்கு 48 மைல் தூரத்திலுள்ள வில்லோபம் என்னுங் காட்டில் செல்லும் கணவாய்களில் பலவகைப்பட்ட மிருகங்களின் எலும்பும் மனிதர்களின் எலும்பும் காணப்படுகின்றன. இவை 10000வருஷங்களுக்கு முற்பட்டவையென்று சாஸ்திரிகள் கூறுகின்றனர்.

ஆணுடை தரிக்க விரும்பும் ஒரு ஸ்திரீ.

அமெரிக்காவில் வசிக்கும் ஒருஸ்திரீ அமெரிக்காப் பிரசிடெண்டு வில்லியம் என்பவரிடத்து ஆணுடை தரித்துக்கொள்ளத் தனக்குத்தாவு தரவேண்டும்; அதனால் தான் வாரத்தில் 3 பவுண்டு சம்பாதித்தல் கூடுமென்று மனுச் செய்திருக்கின்றனள்.

டாராவென்னும் ஒருபலசாலி ஸ்திரீ.

பரோடா ராஜ வம்சத்தைச்சேர்ந்த டாராவென்னு மொரு ஸ்திரீ இப்போது தமது தேக வல்லமையை இந்தியன் சாண்டோ வென்னும், புரொபெஸர் ராமமூர்த்தி செய்யும் அற்புதச் செயலிலும் அதிகமாகச் செய்துவருகின்றனர். இவர் அநந்தப்பூர் முதலிய விடங்களில் தமது தேக வலிமையைக் காட்டியிருக்கின்றனர்.

புருஷனுக்கு மருந்து வைத்த ஒருபேய் மகள்.

நன்னிலம் தாலூக்காவிலுள்ள கோவில் திருமாகாளத்தில் ராமசாமி யென்பவனுக்கு அவனது மனைவியான தைலம்மா ளென்பாள் அவன் தன்மீது பிரியமாயிருப்பானென்று உணவில் மருந்து வைத்துவிட்டாள்; அதனால் அவனுடம்பு வீங்கிப்போயிற்று. சந்தேகத்தின்மீது அவளை விசாரிக்க அது ருசுவாயிற்று. அதுபற்றி அவள் விசாரணையி லிருக்கின்றாள். அவன் ஆஸ்பத்திரியில் சிகிச்சை செய்யப்பட்டு வருகின்றான்.

மோட்டார்வண்டிப் பந்தய விபத்து.

நாஷ்வில்லியில் சில தினங்கட்கு முன் 25 மைல் தூரஞ்செல்ல மோட்டார்வண்டிப் பந்தயம் நடைபெற்றது. நான்கு வண்டிகள் மணிக்கு 60 மைல் ஓடும் வேகமாகச் சென்றன. அதனால் ஒன்றோடொன்று மோதி யுடைந்தன; வண்டியோட்டும் நால்வரு மிறந்தனர்; வேடிக்கை பார்க்க வழியில் வந்த பலர் காயமடைந்தனர்.

ஒருமோசக்கேஸ்.

இரங்கூனில் "இந்தியன் டெலிகிராப் அஸோசியேஷன் கிளப்" என்னும் சங்கத்தின் கமிட்டிமெம்பர்கள் ஐவர் கவர்ன்மெண்டினுத்தரவின்றி டிக்கெட்விற்று லாட்டரி நடத்தினரென்றும், அதுபற்றி ஆபீஸொன்று வைத்தாரென்றும் குற்றஞ்சாற்றப்பட்டு விசாரிக்கப்பட்டு வருகின்றனர்.

கீழ்வகுப்பாரை உயர்த்துதல்.

லாகூரில் வசிக்கும் பண்டிதர் ராமபுஜதத் சௌத்திரி யென்பவர் காஷ்மீர்தேசத்திலும் அதைச் சுற்றியுள்ள பிரிட்டிஷ் நாட்டிலும் சுற்றுப் பிரயாணஞ்செய்து 5,000கீழ்வகுப்புச் சாதியரைத்தாமனுசரிக்கும் ஆரியஸமாஜத்தில் சேர்த்துக்கொண்டு முன்னுக்குக் கொண்டு வந்திருக்கின்றார்.

கொள்ளைகளை யடக்கக்கூடும் ஒரு கான்பொரன்ஸ்.

வங்காளமாகாணத்தில் பலவிடங்களில் கொள்ளைகள் நடப்பது அதிகரித்துவருவதால் அக்கொள்ளைகளை யடக்குவதுபற்றி அந்த மாகாணத்து டிவிஷனல் கமிஷனர்கள் டார்ஜிலிங்கில் ஒரு கான்பொரன்ஸ் கூடி யோசிக்க முயற்சி செய்து வருகின்றனர்.

இந்தியாக்கவர்ன்மெண்டாரின் ஓர் எச்சரிக்கை.

இந்தியாக் கவர்ன்மெண்டார் பிலிப் பைபன் தீவுகளின் பிரதான நகரமாகிய மானில்லாவில் இந்தியர்களுக்கு வேலை கிடைப்பதரிதென்

றும், மாகாணக்கவர்ன்மெண்டார் எவ்வெவ்விடங்களிலிருந்து இந்தியர்கள் மானில்லாவுக்குப் போகின்றார்களோ முக்கியமாக அவ்வவ்விடங்களில் மானில்லாவில் இந்தியர்களுக்கு வேலைகிடைப்பதரிதென்று தெரியப் படுத்தவேண்டுமென்றும், இந்தியர்கள் மானில்லாவுக்குப் போகக் கப்பலேறுந்துறை முகங்களில் அங்கு வேலை யகப்படுவது கஷ்டமென்று அவர்கட்கு எச்சரிக்கை செய்யவேண்டுமென்றும், அறிக்கை செய்திருக்கின்றனர்.

சென்னைக்கவர்ன்மெண்டார், நமது சக்ரவர்த்தியாரும் சக்ரவர்த்தினியாரும் அங்கங்கே பேசியவற்றுள் முக்கியமானவற்றைத் தேசபாஷைகளில் மொழிபெயர்த்துக் கவர்ன்மெண்டச்சுக்கூடத்தில் அச்சிடவேண்டுமென்றும், அவற்றைச் சென்னை ராஜதானியிலுள்ள வித்யாஸ்தாபனங்கட்கும், கிராமாதிகளுக்கும் கொடுக்கவேண்டுமென்றும் உத்தரவுசெய்திருக்கின்றனர்.

ஒரு கற்புடைப் பெண்ணின் தற்கொலை.

பெர்லின்நகரில் வசிக்கும் சோபியா என்னுமொரு ராஜகுமாரத்தி யூதயிங்சர் என்பவரது புத்திரனை விவாகஞ்செய்து கொள்ளவிருப்பங் கொண்டிருந்தாள். அதனை அவளது பிதாவறிந்து, அவ்வாறு விவாகம்நடக்குமாயின், ராஜகுமாரத்தி யென்னும் பட்டத்தையிழந்துவிட நேரிடுமென்று கூறினார். தனது கருத்தை தடுத்தமைபற்றி அவள்மற்றவரை விவாகஞ் செய்துகொள்ள விரும்பாது உலகவாழ்வை வெறுத்துத் தற்கொலைசெய்து கொண்டாள்.

ஒருவர்கொன்று தின்னப்பட்டார்.

அமேரிக்காவில் வசிக்கும் மிஸ்டர் ஜோன்வார்னரென்பவர் ரேடியமென்னு மிடத்துக்கு அங்குள்ள பொருள்களைப்பற்றி ஆராய்ச்சி செய்யச் சென்றனர். அங்கு வசிக்கும் நரமாமிசபட்சணிகளுள் இருவர் அவரைக் கொலைசெய்து தின்றோடிப் போயினர்.

ஒரு பெரும் புரளி.

அமெரிக்காவிலுள்ள பனுவில் வசிக்கும் ஒருவன் வெகுசீக்கிரத்தில் ஒருமகாப்பிரளயமுண்டாகப் போகின்றதென்றுகூறி, 86- சிஷ்யர்களைச் சேர்த்துக்கொண்டு ஒரு பாலங்கட்டி வருகின்றான். பிரளயத்திற்குப்பின் பிராணிகளை விருத்திசெய்ய, ஜதை ஜதையாகப் பிராணிகளைச் சேர்த்து வருகின்றான்.

ஓர் அநாதைக் குழந்தை.

சில தினங்கட்கு முன் ஒருநாளிரவு சுமார் 12 மணிக்கு மன்னார்குடி உப்புக்காரவீதியிலுள்ள ஒருவீட்டின் திண்ணையின்மீது யாரோ ஒருத்தி ஓராண்குழந்தையைப்பெற்று அக்குழந்தையை அங்கேயே வைத்துப் போய்விட்டாள். அக்குழந்தையை அங்கொருவரெடுத்து வளர்த்து வருகின்றனர். அக்குழந்தையைப் பெற்றவளின்னாளென்று தெரியவில்லை.

நிலவரியை யுயர்த்துதல்.

நமது சென்னைக்கவர்ன்மெண்டார் இப்போது விளை நிலங்கள்மீது விதித்துள்ள வரியில் ஒருரூபாய்க்கு ஓர்அணு அதிகமாக வாங்குவதை இரண்டணுவாக வாங்கலாமாவென்று ஆலோசித்து வருகின்றனர். அதுபற்றிப் பலர் ஆக்ஷேபித்து ஆங்காங்குச்சபைகள்கூடிப்பேசிவருகின்றனர்.

ஒரு போலீஸ் ஹெட் கான்ஸ்டேபில் சுட்டுக் கொல்லப்பட்டார்.

செப்டம்பர்மாதம் 29-ந்தேதி மாலை கல்கத்தாவில் உளவறியும் போலீஸைச் சேர்ந்த ஹரிபாததேவ் என்னும் ஒரு ஹெட் கான்ஸ்டேபில் கல்கத்தா காலேஜ் சுற்றிடத்தை ராஜாங்கதுவேஷ பத்திரங்கள் சுவர்களில் ஒட்டப்பட்டிருக்கின்றனவா வென்று சுற்றிப் பார்த்து வந்து, அங்கிருக்கும் குளக்கரையில் உட்கார்ந்து முகங்கழுவும்போது அவர்க்குப்பின்னேவந்த 10 பேரடங்கிய ஒரு கூட்டத்திலிருந்து மூன்று துப்பாக்கிக் குண்டுகள் அவர்மீது விழுந்தன சுட்டவர்கள் தப்பி யோடிப்போயினர். உடனே போலீஸார் வந்து அவரை ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோயினர். அவர் வழியிலேயே யிறந்துபோனர். போலீஸார் இருவரைச் சந்தேகத்தின்மீது பிடித்து விசாரித்து வருகின்றனர். கல்கத்தா போலீஸார் இவரைச்சுட்டுக் கொன்றவரைக் கண்டுபிடித்துத் தெரிவிப்பவர்க்கு 10, 000 ரூபாய் வெகுமதி தரப்படுமென்று விளம்பரஞ் செய்திருக்கின்றனர்; அநேக வீடுகளைச் சந்தேகங்கொண்டு சோதனை செய்து வருகின்றனர். இவரைச் சுட்டபோது அங்குச் சுமார் 5000 பேரிருந்தனராம்.

ராஜப்பிரதிநிதியின் விஜயம்.

நமது ராஜப்பிரதிநிதி லார்ட்ஆர்டிஞ் அவர்கள் நவம்பர்மாத முடிவில் ஒரிஸா தேசத்தின்பிரதான நகரமாகிய கட்டாங்கைப் போய்பார்த்துவர ஏற்பாடு செய்திருக்கின்றார். இதுகாறும் ராஜப்பிரதிநிதிகளுள் ஒருவரும் அங்கு விஜயஞ் செய்யவில்லையாம்.

ராஜப்பிரதிநிதி அவர்கள் சென்னைக்குவிஜயஞ் செய்யும் போது, கொச்சியில் துறைமுகங் கட்டுமிடத்தைப் பார்க்குமாறு கொச்சிக்குப்போய் வருவாரென்று சொல்லப்படுகின்றது.

ஒருதென்னை விசேஷம்.

கொழும்பிலுள்ள பரிஸ்டல் ஒட்டலின் தாழ்வாரத்தில் 1-30 அடியுயரமுடைய ஒருதென்னமரம் இருக்கின்றதாம். அது பாளைதள்ளிக் காய்த்து வருகின்றதாம்.

மண்ணெண்ணெய்க் கிணறுகள்.

பசபிக்மகாசமுத்திரத்தி லுள்ளபாபுவா என்னுந்தீவில் மண்ணெண்ணெய்க் கிணறுகள் விசேடமாக விருக்கின்றனவாம்.

Friedrich Fröbel.